சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

பு.சா. 01 திரு. நெடுமாறன் த /பெ திரு. சுப்பிரமணி , வயது . 57

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை .–**

. 3.நான் சுமார் 9 நபர்கள் மீது காசோலை மோசடி வழக்குகள் தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எத்தனை நபர்கள் மீது காசோலை மோசடி வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சுமார் இரண்டு மூன்று நபர்கள் மீது தாக்கல் செய்துள்ளேன். ஆஜர் எதிரி என் வங்கி கணக்கிற்கு பலமுறை UPI மூலம் பணம் அனுப்பி உள்ளார் என்றாலும் அந்த ஆவணங்கள் தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். ( **அந்த ஆவணம் எ.சா.ஆ. 01 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**). அந்தப்பணம் கமிஷனுக்காக என்னிடம் கொடுக்கப்பட்ட பணம் ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் எதிரி எனக்கு பணம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரமானது நான் அந்த சமயத்தில் இன்டீரியர் டிசைனிங் வேலை செய்து கொண்டிருந்ததால் அதற்கு எதிரி எனக்கு சப்ளை செய்ததற்கான கணக்கு ஆகும். ( **அந்த ஆவணம் எ.சா.ஆ. 02 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**). என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ.02 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள பணம் என்னவென்றால் அந்தந்த தேதிகளில் எதிரி எனக்கு சப்ளை செய்த பொருட்களுக்கு உண்டான பணமாகும். அந்த ஆவணத்தில் 1 , 2 கையொப்பங்கள் என்னுடையது அல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் இல்லை.

04. எதிரி கேரளாவில் சரக்கு ஏற்றுமதி செய்த போது பணத்தை வசூல் செய்ய நான் அங்கு சென்றேன் என்றாலும், அங்கு நான் செய்த செலவுகளை தான் ஒரு சீட்டில் எழுதிகொடுத்துள்ளேன் என்றாலும், அந்த சீட்டு தான் என்னிடம் காட்டப்படும் சீட்டு என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் பணம் பரிவர்தனைகள் உள்ளது என்று நான் கூறிப்பிட்டுள்ள நிலையில் அந்த பணம் பரிவர்தனைகள் ரொக்கமாகவும், காசோலையாகவும் இருக்கும் என்றால் சரியல்ல. ரொக்கமாக மட்டுமே கொடுப்பார். கடைசி சில நாட்களாக

UPI மூலமாக அனுப்பினார். எனக்கும் எதிரிக்கும் 2011 ல் இருந்து பணபரிவார்த்தனைகள் உள்ளது என்றால் சரிதான். எதிரி நடத்தி வரும் கடையில் நானும் ஒரு பங்குதாரர் என்றாலும், அந்த கடையில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டதால் நான் அந்த கடையை விட்டுவிட்டு வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. நானும் எதிரியும் பங்குதாரராக கடையில் இருந்த சமயத்தில் நான் தான் வெளிஊர்களுக்கு வசூலுக்கு செல்வேன் என்றாலும், அப்போது பண பரிவர்தனைக்காக என்னிடம் கொடுக்கப்பட்டிருந்த கசோலைகளை நான் மோசடியாக பயன்படுத்தி எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு என்னிடம் கொடுத்த காசோலைகளை நான் பல நபர்களுக்கு அந்த வியபாரத்தின் ரீதியாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் காசோலையை தவறுதலாக பயன்படுத்தி இந்த வழக்கு தொடுத்துள்ளேன் என்றாலும், எதிரி என்னிடம் பணம் ஏதும் பெறவில்லை என்றாலும் சரியல்ல.

KODHAVADI SUBRAMANIAN DINESH

Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH

Witness sign

Judicial Magistrate No.1
Thirupattur.